RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s227

OPEN ACCESS

# திருமங்கையாழ்வாரின் மடல்களில் இறைநெறிக் கோட்பாடுகள்

ச. இளமாறன் [அ, *]

[அ] ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா

# Theories of Theology in the Letters of Thirumangai Alvar

**S. Ilamaran** [a, *]

[a] Department of Comparative Literature, School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India.

* Corresponding Author: maranela91@gmail.com

Received: 04-01-2021
Revised: 17-02-2021
Accepted: 21-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

After the 6$^{th}$ century in Tamil literature, Saivism and Vaishnavism were the most prevalent in tamil literature, and the hymns of the Alvars developed a variety of new techniques and theories for devotion. Thirumangai Alvar has sung a letter with him as heroine and Lord as hero. In the Sangam tamil literature, 'Madal Climbing' is seen as a male only, Thirumangai Alvar makes himself a woman and falls in love with Lord Vishnu and expresses his love for the Lord by climbing the lobe. Like Thirumangai Alvar, periyazhwar has made himself a mother and composed songs using Vishnu as a child. This technique is transformed from the grammar of Tamil. He who achieves happiness will receive virtue and wealth. Tirumangai Alvar says that it is best to see The lord in this world and enjoy it. The object of this article is to study the pleasures of life and the principles of theology of the heavens.

**Keywords:** Tamil literature, Thirumangai Alvar, Periyazhwar, Lord

## முன்னுரை

மனிதன் சிந்தனையாற்றலால் பிற உயிரினும் மேம்பட்டு பூவுலகில் முதன்மையானவனாக காணப்படுகிறான். அத்தகு சிந்தனையாற்றல் மேம்பட்டு அனைத்து உயிரிகளையும் ஒன்றென நினைத்து அன்பு வலையில் பின்னப்பட்ட உயிர்க்கோளமாய் இப்பூவுலகை மாற்ற மனிதனுக்கு தன்னைமீறிய ஒரு துணை தேவைப்பட்டது எனலாம். அது தன்னினும் உயர்ந்ததாய் தன்னை வழிநடத்தும் ஒன்றாய் இருக்க எண்ணினான். சிந்திப்பதற்கு முன்பே தன்னினும் உயர்ந்த சக்தி ஒன்று உள்ளதை உணர்ந்த மனிதன் சிந்திக்கத் தளைப்பட்ட பின் அதற்கு உருவம் கொடுத்து வழிபடத் துவங்கினான். மனிதனுக்கு மனிதன் சிந்தனை மாற்றம் கொண்டவன் என்பதால் ஒருவன் வழிபடத் துவங்கிய முறையை மற்றவன் வழிபட மறுத்தான். பல்வேறு வழிபாட்டு முறைகள் தோன்றின. தமிழகத்தைப் பொறுத்தவரை சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகியவை பெரும்பாலும் காணப்பட்டது. இதில் கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்கு பிறகு சைவமும், வைணவமும் பெரும்பாண்மையானது எனலாம். அவ்வகையில் வைணவம் புத்தெளிச்சி பெற ஆழ்வார்கள் காரணமாயினர். அவர்களது தமிழ் பாசுரங்கள் வைணவ சமயத்தோடு தமிழின் மணத்தையும் பரவச்செய்தது. எளிமையான தமிழில் ஆழமான கருத்துக்களை ஆழ்வார்களின் பாசுரங்கள் வெளிப்படுத்தின. திருமாலின் திருக்குணங்களில் ஆழ்ந்தவர்களான ஆழ்வார்கள் திருமாலின் புகழ்பாடினர். இந்தியாவின் பக்தியிலக்கிய கலாச்சாரத்தில் தமிழகத்தின் பக்தி இலக்கிய கலாச்சாரம் தொன்றுதொட்டே புதுமையைக் கண்டு வந்ததை மறுக்க இயலாது.

அவ்வகையில் ஆழ்வார்கள் பாசுரங்களும் பக்தியிலக்கியத்திற்கென பல்வேறு புதுவிதமான உத்திகளையும், கோட்பாடுகளையும் தன்னுள்ளே கொண்டுள்ளன எனலாம். இறைவனை பல்வேறு முறைகளில் வழிபட்டனர் ஆழ்வார்கள். அவற்றில் திருமங்கை ஆழ்வார் தன்னை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் கொண்டு மடல் பாடியுள்ளார். இவ்விதமான உத்தி தமிழின் இலக்கண மரபிலிருந்து மாற்றமடைந்து காணப்பட்டாலும் அதற்கான காரணங்களையும் அவரே கூறிச்செல்வதோடு அனைத்து பக்தர்களுக்கும் சில இறைக்கோட்பாடுகளையும் கூறிச்செல்கிறார்.

## தமிழ்ப் பண்பாட்டில் மடல்

சங்க அக இலக்கியங்களில் மடல் என்பது தலைவன், தலைவியின் களவு வாழ்க்கையை கற்பு வாழ்க்கையாக மாற்றம் அடையவிடாமல் தடுக்கும் இன்னல்களை களைய உதவும் கருவிகளில் ஒன்றாகும். தலைவியின் பெற்றோர் திருமணத்திற்கு ஏதேனும் மறுப்பு தெரிவிக்கும் நிலையில் தலைவியை அடையவும், அவள் மீது கொண்டுள்ள அன்பின் மிகுதியை வெளிப்படுத்தவும் மடல் ஏறுதல் தலைவனுக்கு உறுதுணையாகிறது. இத்தகு மடல் ஏறல் தலைவனுக்கு மட்டுமே உரியது என்றும், தலைவி இத்தகு செயலில் ஈடுபடக்கூடாது என்பதும் அக்கால வழக்கமாக இருந்துள்ளது. இதனை,

“எத்துணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்

பொற்புடை நெறியமை இன்மையான்”

என்ற தொல்காப்பிய நூற்பாவாலும்,

“கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்

பெண்ணிற் பெருந்தக்க தில்”

என்ற திருக்குறளாலும் அறியலாம்.

## திருமங்கையாரின் மடல் திறம்

இறைவனை அடைவதற்கான வழிகளில் பல்வேறு உத்திகளைப் பாசுரங்கள் இயற்ற கையாளுகிறார் திருமங்கையாழ்வார். அவற்றில் ஒரு உத்திமுறை அகத்திணைப் பொருள் கொண்டு பாசுரங்கள் இயற்றுவது எனலாம். அவ்வகையில் திருவாய்மொழியில் 27 அகத்திணைப் பொருளமைந்த பதிகங்கள் பாடியுள்ளார். அவற்றில் 17 பதிகங்கள் மகள் கூற்றாகவும், 3 பதிகங்கள் திருத்தாயார் கூற்றாகவும், 7 பதிகங்கள் தோழி கூற்றாகவும் அமைந்துள்ளன. பெரிய திருமொழியில் 23 அகப்பொருள் அமைந்த பதிகங்கள் உள்ளன. திருநெடுந்தாண்டகப் பதிகங்களும், 2 மடல்களும், மொத்தமாக 27 பதிகங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 17 தலைவிக் கூற்றாகவும், 10 பதிகங்கள் திருத்தாயார் கூற்றாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு அகத்திணைப் பொருளில் இறைவனை பாடும் முறையை திருமங்கையாழ்வார் பெரிதும் விரும்புவதைக் காணலாம்.

அவற்றில் சிறிய திருமடல் நூற்றைம்பத்தைந்து அடிகளைக் கொண்டும், பெரியதிருமடல் இருநூற்றுத் தொன்னூற்றேழு அடிகளைக் கொண்டும் கலிவெண்பாவால் பாடப்பட்டுள்ளது. இதில் சிறிய திருமடல், திருக்கண்ணபுரத்துச் சௌரிராசப் பெருமானைப் பற்றிப் பாடுகிறது. பெரிய திருமடல், அர்ச்சை வடிவில் உள்ள திருநறையூர் நம்பி தொடர்பாக அருளப்பெற்றது. நாயகியாக தன்னை எண்ணிக்கொள்ளும் திருமங்கையார் அந்நிலையில் தன்னை பரகாலநாயகியாக மாற்றிக்கொள்கிறார். பரகால நாயகியே மடல்ஏறத் துணிகிறாள்.

இறைவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் பாவித்து மடல் பாடுகிறார் திருமங்கையாழ்வார். இதில் இறைவனோடு இணைய என்னும் திருமங்கையாருக்கு மடல் ஏறுதல் ஆண்களுக்கு மட்டுமே உரியது என பண்டையத் தமிழ் இலக்கணங்களும், தமிழ் இலக்கியங்களும்

கூறியிருப்பது வெறுப்பைத் தருகிறது. தமிழின் மீது ஆழ்ந்தப் பற்று கொண்டிருந்தாலும் காதல் மிகும்பொழுது வரைமுறைகள் தென்படாது என்பது போல் செயல்படுகிறார். காதல் மிகும் காலத்து,

“காமக் கணிச்சி யுடைக்கும் நிறையென்னும்

நாணுத் தாழ் வீழ்த்த கதவு”

என்பது போல் செயல்படுவர் எனத் திருக்குறள் உரைப்பது இங்கு எண்ணத்தக்கது. அதனை உறுதிசெய்யும் வகையில் தன்னிலை மாறித் தலைவியாய் நிற்கும் மங்கையர்க் கோன் மடல்பாடத் தனக்கு ஏதுவான ஒரு கலாச்சாரத்தைத் தேடுகிறார். இதனை,

“அன்ன நடையார் அலர் ஏச ஆடவர் மேல்

மன்னும் மடலூரார் என்ப தோர் வாசகமும்

தென்னுரையிற் கேட்டறிவதுண்டு அதனை யாம் தெளியோம்

மன்னும் வடநெறியே வேண்டினோம்”

என்ற பாசுரத்தால் அறியலாம். தமிழ்ப் பண்பாட்டின் படி பெண்கள் மடல் ஏறத் தடை உள்ளதால் நான் வடநெறியின் பக்கமே செல்கிறேன் என்கிறார். காதலனை அடைய தடையாய் பெற்றோர் இருந்தால் அவர்கள் தன்னை வளர்த்து, அன்பு காட்டியதையெல்லாம் மறக்கும் தலைவி போல் செயல்படுகிறார்.

## மடல் காட்டும் இறைக் கோட்பாடு

இறைவனடிச் சேரவிரும்பும் பக்தர்கள் அனைவரும் வீடுபேற்றினை விரும்புவர். பிறவாவரம் வேண்டும் என்பதே அதன் நோக்கம். மனிதனாய் பிறந்து இப்பூவுலகில் அனைத்து இன்பங்களையும் அனுபவித்தாலும் அனைத்தையும் துன்பமாகவே கருதி இவ்வுலகையும் இப்பிறவியையும் வெறுப்பர். இறைவனை அடைய வேண்டுமாயின் தன்னைத்தானே வருத்த வேண்டும் என்ற சட்டவிதியைத் தங்களுக்குள்ளே அமைத்து வாழ்வர். உலக பற்றினை வெறுத்து துறவறம் புகுந்து ஐம்புலன்களையும் அடக்குவர். இல்லறத்தை வெறுத்து ஒதுக்குவர். இவற்றிற்கெல்லாம் காரணம் சொர்க்கத்தை அடையவிரும்பும் ஆசையே எனலாம். சொர்க்கம் நிரந்தர இன்பத்திற்கான இடம் என்று வரையறை செய்தனர். அதை யாரும் கண்டதில்லை என்றாலும் அதனையே சுற்றிச் சுற்றி வந்தனர். அமிழ்தம் உண்டு என்றும் அழியாத இன்பத்தைப் பெறவேண்டும் என்றெண்ணினர். மனித உடல் சுமையென்றும், அதனை நீக்கி ஆன்மாவைப் புனிதமாக்க வேண்டும் என்றும் கூறினர். ஆனால் ஆன்மா எனப்படும் உயிர் உடலை நீங்கினால் அதனால் தனித்து இயங்க இயலாது என்பதை அறியலர். திருமூலர் உடலின் சிறப்பைக் கூறும்பொழுது,

“உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்

உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்

உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று

உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே”

என்கிறார். ஒவ்வொரு உயிரின் உடலுள்ளும் இறைவன் இருக்கிறான். அவ்வுடல் நீங்கிச் சொர்க்கம் என்ற ஒன்றை அடைதல் மூடத்தனம். திருமூலர் மற்றொரு பாட்டில் உடல் இல்லையெனில் சிறந்த ஞானத்தைப் பெற முடியாது என்றும், எனவே உடலை நன்கு பேணிக்காக்வேண்டும் என்றும் கூறுவார். திருமங்கையாழ்வார் இதனை வழியுறுத்தும் விதமாக அறம், பொருள், இன்பம் என்ற மூன்றே இவ்வுலகில் உள்ள ஒழுகலாறும், மனிதன் கடைபிடிக்க வேண்டிய, அடைய வேண்டிய நிலைகளும் என்கிறார். மேலும் இம்மூன்றிலும் இன்பம் என்பது சிறப்பானது. காரணம் இன்பம் பெற்றவர் மற்ற இரண்டையும் தானாகவே பெற்றுவிடுவர் என்கிறார். இதனை,

"நீரார வேலி நிலமங்கை யென்னுமிப்
பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே - அம்மூன்றும்
ஆராயில் தானே அறம்பொரு ளின்பமென்று
ஆரா ரிவற்றி னிடையதனை யெய்துவார்
சீரா ரிருகலையு மெய்துவர் - சிக்கனமற்று"

என்ற மடல் வரிகளால் அறியலாம். இங்கு கூறப்பட்ட இன்பம் என்பது காமத்தைக் கூறுவதே ஆகும். எனினும் மாந்தர்த் தம்முள் கொள்ளும் காமம் அன்று. மனிதன் கடவுள் கொள்ளும் காதல். அவனை எண்ணி எண்ணி உருகுதல் மட்டுமன்றி அவனை அனுபவிக்கும் திறம் என்பதைக் குறிப்பிடுவது. ஒவ்வொரு மனிதனும் இறைவனின் மீது கொண்டுள்ள காதலால் இன்பம் பெற்று இவ்வுலகிலே, இம்மனித உடலோடு சொர்க்கத்தை ஒவ்வொரு வினாடியும் அனுபவிக்க வேண்டும் என்கிறார். அவ்வாறு இல்லாமல் இவ்வுலகில் சிலர் நான்காவது நெறி என வீடுபேற்றினைக் கூறுவர், அது சரியான மார்க்கம் அன்று என்கிறார். அவர்களை பழிக்கவும் செய்கிறார். இதனை,

"ஓராமை யன்றே உலகத்தார் சொல்லுஞ்சொல்
ஓராமை யாமா றதுவுரைக்கேன் கேளாமே
காரார் புரவியேழ் பூண்ட தனியாழித்
தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு
ஆரா வமுதமங் கெய்தி - அதில்நின்றும்
வாரா தொழிவதொன் றுண்டே? அதுநிற்க
ஏரார் முயல்விட்டுக் காக்கைபின் போவதே!"

என்ற வரிகளால் அறியலாம். மேலும் இவ்வரிகளில் ஒரு புதுவித இறைக்கோட்பாட்டை வித்திடுகிறார். அதாவது இறைவனை அடைய விரும்புவோர் இம்மனித உடலினைக் கொண்டு அவனைக் கண்டு, புணர்ந்து இன்பம் துய்க்க வேண்டும். அதை விடுத்து இவ்வுடலை நீக்கி வீடுபேற்றினைப் பெற்று இறைவனை காண்பேன் என்பதும் சொர்க்கம் செல்வேன் என்பதும் மூடத்தனம் என்கிறனர். அதாவது ஏழ் குதிரைகளால் சுற்றிவரும் சூரியனைக் கடந்து சென்று அங்குள்ள அரிய அமுதத்தைப் பருகி, இன்பத்தில் திளைத்து அங்கேயே தங்கிவிடுவேன் என்பார்கள் அதுவல்ல சொர்க்கம் என்பது இவ்வுலக வாழ்வில் இறைவனைக் கண்டு இன்பம் துய்ப்பதே சொர்க்கம் என்கிறார். அதற்கு சரியான உவமை ஒன்று பயன்படுத்துகிறார். அதாவது இவ்வுலகில் இறைவனைக் கண்டு இன்பம் அடையாமல் நான் காணாத சொர்க்கத்திற்கு சென்று இன்பம் கொள்கிறேன் என்பது தரையில் ஓடும் முயலைப்பிடிப்பதை விட்டுவிட்டு வானில் பறந்து செல்லும் காக்கையை பிடிக்க நினைப்பது போன்ற முட்டாள்தனமானது என்கிறார். இவ்வுவமை அப்பொருள்களின் தன்மையோடு மட்டுமல்லாது வீடுபேற்றின் தன்மையையும் நன்கு புலப்படுத்திச் செல்கின்றது. இத்தகு இறைநெறிக் கோட்பாட்டை எடுத்துக் கூற 'மடல்' எனும் உத்திமுறை பயன்பட்டுள்ளது. இறைவனை அடைய காமம் கொள்ளும் தலைவி ஒருத்தி அனைத்தையும் எதிர்த்து புதிய புதிய வழிகளைத் தேடுகிறாள்.

## முடிவுரை

அனைத்து உயிர்களும் இறைவனை அடைய விரும்புகின்றன. அவ்வாறு இறைவனை அடையவிரும்பும் உயிர்கள் பல்வேறு வழிகளைத் தேடுகின்றன. ஞானிகளும், யோகிகளும் கூட இறைவனை அடைய பல்வேறு வழிகளைச் சுட்டிச்செல்கின்றனர். அது பெரும்பாலும் சொர்க்கத்தை அடையவிரும்பும் வீடுபேற்றினைக் குறிப்பதாக அமைகின்றது. திருக்குறளில் திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றினையே பால்களாகக் கொண்டுள்ளார். இதனால் அறம், பொருளால் சிறந்து இன்பத்தை அனுபவிக்கும் அனைவருக்கும் இவ்வுலகமே சொர்க்கமாக அமையும் என்பதையும்

வீடுபேறு என்பதை ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்று என்பதையும் அறியலாம். திருமங்கை ஆழ்வாரும் இத்தகு நிலையையே தமது திருமடல்களில் குறிப்பிடுகிறார். பிற சமயங்களில் இல்லாத ஒரு புதுகருத்தாக இதனைக் காணலாம். அதாவது இன்பத்தை எய்தியவனுக்கு அறமும் பொருளும் கிடைத்துவிடும். இறைவனை இவ்வுடலோடு இவ்வுலகத்தில் கண்டு, அனுபவித்து இன்பம் எய்தும் நிலையே சிறந்தது என்கிறார். இதனால் தேவலோகம் என்பதும் உடலற்ற உயிரைக் கொண்டு உடலோடு உயிர் அனுபவிக்கும் இன்பங்களை இந்திரலோகத்தில் (சொர்க்கத்தில்) அனுபவிக்கலாம் என்பதும் இறைவனை நினையாமல் இருப்பதற்கான மூடத்தனம் என்கிற கோட்பாட்டை தம் மடல்களின் வழியாக திருமங்கையாழ்வார் சுட்டிச்செல்கின்றார்.

## References


Alagar nambi, (2016), Thirumanthiram given by Thirumoolar, Kavitha Publications, Chennai, India.

Devarajan, Na.S., (2002) Vaishnavism and Alvars Sri Shenbaga Publishing, Chennai, India

Durai Rajaram, (2008) Naalayira Divya Prabandham, Volume-1, Mullai Nilayam, Chennai, India

Ilampuranar, (2011) Tholkappiyam moolamum uraiyum, Saradha pathippagam, Chennai, India

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India



**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License